**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 474 /2020 P.W.1 / LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சசிகலா** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. நாகராஜன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.09.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை**

*1)* நான் வடுவூர் தென்பாதியில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன தமிழச்செல்வன் எனது அப்பா ஆவார். சுமார் 2. 1/2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எனது தகப்பனார் இருசக்கர வாகனத்தில் வடுவூர் புதுக்கோட்டை பெட்ரோல் பாங்க் அருகில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது , மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த நான்கு சக்கர வாகனம் அசோக் லைலேண்ட் வாகனம் எனது தகப்பனார் வந்த வாகனத்தின் மீது மோதியதில் எனது தகப்பானருக்கு தலை , இருபக்க விலா எலும்புகள் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டதாக தகவல் தெரிந்து வடுவூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்த்தபோது எனது தகப்பனாருக்கு தலை மற்றும் உடம்பில் பலத்த காயம் ஏற்பட்டு மயங்கிய நிலையில் இருந்தார்.

2) அவரை மேல் சிகிச்சைக்காக வினோதகன் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம். அங்கு சிகிச்சையில் இருக்கும்போது வடுவூர் போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில்உ ள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்ததுதான். **அந்த புகார் வாக்குமூலம் அசா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கொடுத்த புகாரில் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விவரம் சொன்னேன். எனது அப்பா விபத்தின் காரணமாக இறந்து போய் விட்டார் . விபத்தை ஏற்படுத்தியது ரவிச்சந்திரன் மகன் வெங்கடேசன் என்று தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் எனது

தந்தைக்கு முதல் முதல் சிகிச்சை செய்த இடம் வடுவூர் அரசு மருத்துவமனை என்று சொன்னால் சரிதான். அங்கு வந்த போலீசார் என்னிடம் நடந்த விவரத்தை என்னிடம் கேட்டார்கள் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள், என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள்.

2) சுமார் 2,3 பேப்பர்களில் கையெழுத்து போட்டுக்கொடுத்திருப்பேன. பின்னர் எனது தந்தையை அழைத்துக்கொண்டு தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். அங்கேயும் என்னை போலீசார் வந்து விசாரித்து நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டு கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

3) விபத்தின்போது எனது தந்தை மது அருந்தியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்பொழுது வழக்கிற்காக எனது தந்தை மது அருந்தவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி சரவணன் எனது வீட்டுக்காரருக்கு உறவினர்தான். சம்பவ இடத்தில் இருந்து எனது வீடு சுமார் 3, 4 கிமீ துாரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான்.

4) சம்பவத்தின்போது எனது தந்தை பெட்ரோல் பாங்கிற்கு பெட்ரோல் போடும்போது விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் புகார் மற்றும் போலீசார் விசாரணையில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கவனமுடனும், எச்சரிக்கையுடனும் வாகனத்தை இயக்கி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை இறந்தது தொடர்பாக நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

5) இந்த வழக்கு தொடர்பாக ஆண் காவலர்தான் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். வேறு யாரும் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் ஒ ரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது எந்த கவனக்குறைவு இல்லை என்று சொன்னாலும் , இறந்து போன தமிழ்ச்செல்வத்தின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

**Sd/-A.S.Ameerdheen,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 474 /2020 P.W.2 / LW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சரவணன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ.வினாயகம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.09.2022.**

**முதல் விசாரணை**

*1)* நான் வடுவூர் தென்பாதியில் குடியிருந்து விவசாயவேலை செய்து வருகிறேன்.அசா 1 மற்றும் விபத்தில் இறந்து போன தமிழச்செல்வனை எனக்கு தெரியும். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 5 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி மன்னார்குடி - தஞ்சாவூர் சாலையில் வந்து கொண்டிருந்தபோது நான் வடுவூர் H.P பெட்ரோல் பாங்கில் நின்று கொண்டிருந்தபோது மேற்கில் இருந்து வந்த லாரி வேகமாக வந்து தமிழ்ச்செல்வன் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது.

2) அதில் தமிழ்ச்செல்வம் கீழே விழுந்து விட்டார். அதில் அவருக்கு தலை , முகம் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. உடலில் சிராய்ப்புக்காயங்கள் ஏற்பட்டிருந்தது. அந்த வழியே வந்த ஆட்டோவை மறித்து வடுவூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தேன். தமிழ்ச்செல்வன் சட்டைப்பையில் இருந்த டைரியை எடுத்து அவரது மகளுக்கு தகவல் சொன்னேன். நான் 108 வருவதற்கு காலதாமதம் ஆனதால் ஆட்டோ மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கா போய் சேர்த்தேன். விபத்தை ஏற்படுத்திய வண்டி வேகமாக சென்று விட்டதால் என்னால் ஓட்டுநரை அடையாளம் சொல்லமுடியவில்லை. இது சம்பந்தமாக அசா 1 கொடுத்த புகாரில் போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து எனது வீடு 3 கிமீ தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். அசா 1 சசிகலாவின் கணவர் நாகராஜ் எனது மாமா என்று சொன்னால் சரிதான். மன்னார்குடி - தஞ்சாவூர் ரோடு கிழக்கு மேற்கான ரோடு என்று சொன்னால் சரிதான்.

2) நான் மேற்படி பெட்ரோல் பாங்கில் வேலை பார்த்து வருகிறேன். டமார் என்று சத்தம் கேட்டது, போய் பார்த்தேன். தமிழ்செல்வம் கீழே கிடந்தார் , நான் போய் பார்த்து ஆட்டோவில் ஏற்றி விட்டேன். சம்பவத்தின்போது சுமார் 10 நபர்கள் அங்கு இருந்தார்கள். போலீசார் விசாரணையின்போது நான் பெட்ரோல் பாங்கில் வேலை பார்க்கும் விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வேலை பார்க்கும் பெட்ரோல் பாங்கில் சி.சி.டி.வி கேமரா ரோட்டை பார்த்து பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சிசிடிவி பதிவுகளை போலீசார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள், யார் பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது.

3) சம்பவத்தை நான் நேரிட்டு பார்க்கவில்லை என்றும், அசா 1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த போன தமிழ்செல்வத்தின் கவனக்குறைவினால்தான் இந்த வாகன விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் ரவிச்சந்திரன் மகன் வெங்கடேசன் தான் வண்டியை ஓட்டினார் என்று நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அசா1 சசிகலாவிடமும் நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ஏன் என்று எனக்கு யார் என்று தெரியாததால் நான் கூறவில்லை.

4) சம்பவம் நடந்த அன்றே வடுவூர் காவல்துறையினர் வந்து சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள், கையெழுத்து வாங்கிக்கொண்டார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் குறித்து போலீசார் வேறு எந்த நேரத்திலும் என்னை விசாரணை செய்யவில்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

**Sd/-A.S.Ameerdheen,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 474 /2020 P.W.3 / LW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | நீலமேகம் | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ.சிவானந்தம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.09.2022.**

**முதல் விசாரணை**

*1)* நான் கட்டக்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அசா 1 ,2 மற்றும் விபத்தில் இறந்து போன தமிழ்ச்செல்வத்தையும் எனக்கு தெரியும். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 5.30 மணியளவில் தமிழ்ச்செல்வம் தனது இருசக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி மன்னார்குடி - தஞ்சாவூர் சாலையில் நான் வடுவூர் பெட்ரோல் பாங்க் அருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு லாரி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வேகமாக வந்து தமிழ்ச்செல்வம் வந்த இருசக்கர வாகனம் மீது மோதிவிட்டது, அவ்வாறு மோதியதில் தமிழ்ச்செல்வத்திற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரை சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்.

2) மேற்படி வாகனத்தை ஓட்டி நபரை பார்க்கவில்லை. அடையாளம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) முதன் முதலில் இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து , எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். சம்பவத்திற்கு மறு நாள்தான் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகுஎன்னை வடுவூர் போலீசார் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) சம்பவ இடத்தில் இருந்து எனது ஊர் 4 கிமீ தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான் . இறந்த போன தமிழ்ச்செல்வம் எனக்கு என்ன உறவுவேண்டும் என்றால்

உறவினர் இல்லை. அவர் எனக்கு உறவினர்தான், ஆனால் இந்த வழக்கிற்காக உறவினர் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வடுவூர் ரோடானது கிழக்கு மேற்கான ரோடு என்றால் சரிதான். மேற்படி பெட்ரோல் பாங்கானது வடக்குபுறமாக உள்ளது. சம்பவ தினத்தன்று நான் பெட்ரோல் போட்டுக்கொண்டிருந்தேன். டமார் என்று சத்தம் கேட்டது அங்க போய் பார்த்தால் அடிப்பட்டுக்கிடந்தார். நான் உடனே மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்த்தேன். எந்த வண்டி இடித்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். சம்பவம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றாலும், தமிழ்செல்வம் எனக்கு வேண்டியவர் நபர் என்பதால் சம்பவத்தை எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தமிழ்ச்செல்வத்தின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

**Sd/-A.S.Ameerdheen,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 474 /2020 P.W.4 / LW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வீரையன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ.மாதர்சாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.09.2022.**

**முதல் விசாரணை**

*1)* நான் பனையக்கோட்டையில் குடியிருந்து வடுவூர் பெட்ரோல் பாங்கில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி 2 வது கையொப்பம் அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் பெட்ரோல் பாங்கில் வைத்து வடுவூர் போலீசாரிடம் இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் லாரியில் அடிப்பட்டது சம்பந்தமாக விசாரித்து என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னுடன்சாட்சியாக குணசேகரன் என்பவரும் சாட்சிக்கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) சம்பவடம் நடந்தவுடன் வடுவூர் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து எனனை சாட்சியாக இருக்கச்சொல்லி என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

**Sd/-A.S.Ameerdheen,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 474 /2020 P.W.5 / LW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **தங்கமணி** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ.நீலமேகம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.09.2022.**

**முதல் விசாரணை**

*1)* நான் எடகீழையூரில் குடியிருந்து வியாபரம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன தமிழ்ச்செல்வம் எனது பெரியப்பா . எனது பெரியப்பா கடந்த 2020 ல் மாலை 5.30 மணியளவில் வடுவூர் பெட்ரோல் பாங்்க் அருகே இருசக்கர வாகனத்தில் வந்தபோது பின்னால் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு சிகிச்சைக்காக வடுவூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருப்பதாக தகவல் தெரிந்து நான் வடுவூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் வினோதகன் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துப்போய் சேர்த்தேன். அவருக்கு விலா பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டதால் தீவிர சிகிச்சை பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தவர் 15 நாட்கள் கழித்து சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். அவரது பிரேதத்தை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி சவக்கிடங்கு முன்பு வடுவூர் போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்தின் காரணமாக தமிழ்ச்செல்வம் இறந்து போய் விட்டார். விபத்தை ஏற்படுத்தியது நன்னிலத்தை சேர்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 474 /2020 P.W.6 / LW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **நீலமேகம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ.குமரசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.09.2022.**

**முதல் விசாரணை**

*1)* நான் எடகீழையூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன தமிழ்ச்செல்வம் எனது மூத்த சகோதரர் . எனது சகோதரர் கடந்த 05.02.2020 ஆம் தேதி தமிழ்ச்செல்வம் வடுவூர் செல்வதற்காக தனது இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் பாங்க் அருகே வரும்போது டாட்டா ஏசி மோதி காயமடைந்ததாக தகவல் கேள்விப்பட்டு நான் தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது சகோதரருக்கு தலை மற்றும் நெஞ்சுப்பகுதியில் காயம் ஏற்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தார். சுமார் 15 நாட்கள் கழித்து சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். அவரது பிரேதத்தை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூாரி சவக்கிடங்கு முன்பு வடுவூர் போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்தின் காரணமாக தமிழ்ச்செல்வம் இறந்து போய் விட்டார். விபத்தை ஏற்படுத்தியது நன்னிலத்தை சேர்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

**Sd/-A.S.Ameerdheen,**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

மன்னார்குடி